அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.24/89.

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07
1989, மார்ச்சு 31ஆம் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## தகுதிகூர் நிலைக்கால முடிவில் உறுதிப்படுத்தல்

தகுதி கூர்நிலையில் நியமிக்கப்படும் உத்தியோகத்தரொருவரின் விடயத்தில் தாபன விதிக் கோவையின் 11ஆம் அத்தியாயத்தில் விதிக்கப்பட்டதன் பிரகாரம் பின்பற்ற வேண்டிய நடைமுறை அடிக்கடி கடைப்பிடிக்கப்படுவதில்லை எனக் காணப் பட்டுள்ளது.

02. அரசாங்க சேவையில் நிரந்தரமாக வைத்திருப்பதன் பொருட்டு உத்தியோ கத்தரின் தகுதியைப் பரீட்சிப்பதே தகுதிகூர் நிலையில் நியமனம் செய்வதற்கான நோக்கமாகும்.

03. தகுதிகூர் நிலையில் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தரொருவரின் விடயத்தில் பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் நடைமுறைக்கு சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தர்களினதும் கவனம் கோரப்படுகின்றது:-

3.1 நிரந்தரமாக வைத்திருப்பதற்கான தகுதியைப் பற்றி ஐயத்துக்கு இடமளிக்கும் எந்த சார்புகளையும் உத்தியோகத்தர் காண்பித்தால் தம்முடைய குறைபாடுகளை அவர் வெற்றி கொள்வதற்கு அவருக்குச் சகல உதவிகளும் அளிக்கப்படல் வேண்டும். உத்தியோகத்தர் தமது குறைப்பாட்டைத் திருத்தாமல் விடாது தொடர்வாராயின் அது பற்றி எழுத்தில் எச்சரிக்கை வழங்கப்பட்டு அந்த எச்சரிக்கை அவரினால் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் அவரிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

3.2 தகுதிகூர் நிலையில் வைக்கப்படும் உத்தியோகத்தர் ஒவ்வொருவர் மீதும் அவருடைய தகுதிகூர் நிலைக்காலத்தின் முதலாம் ஆண்டின் முடிவில் திணைக்களத் தலைவர் அறிக்கையொன்றினைத் தயாரிப்பித்தல் வேண்டும். அத்துடன் இரண்டாம் ஆண்டின் முடிவிலும் அறிக்கையைத் திரும்பவும் தயாரிப் பித்தல் வேண்டும்.

..6

3:3 தகுதிகூர் நிலைக்காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன் இறுதி அறிக்கையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

3:4 தகுதிகூர் நிலைக்காலத்தின் முடிவில் நியமனம் வழங்கும் அதிகாரி சொல்லப்பட்ட அறிக்கைகளைப் பரிசிலனை செய்தபின் தகுதிகூர் நிலையிலுள்ள உத்தியோகத்தர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதை அல்லது அவருடைய தகுதிகூர் நிலைக்காலம் நீடிக்கப்படுவதை அல்லது தகுதிகூர் நிலையிலுள்ள நியமனம் முடிவுறுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3:5 மேலேயுள்ள 3:4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திலுமான தீர்மானம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

3:6 தகுதிகூர் நிலைக்கால முடிவில் அவரினால் இழைக்கப்பட்ட ஒழுங்கீனம் தொடர்பிலானவொரு விசாரணை பூர்த்தி செய்யப்படாமலிருந்தால் அவருடைய உறுதிப்படுத்தலை விசாரணை பூர்த்தி செய்யப்படும் வரை நிறுத்தி வைக்காமல் அவரின் தகுதிகூர் நிலைக்காலம் நீடிக்கப்படல் வேண்டும் அல்லது தகுதிகூர்நிலை நியமனம் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

3:7 உத்தியோகத்தரொருவரின் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட முன் அவருடைய கல்வித் தகைமை அல்லது பிற தகைமையைச் சரிபார்க்க வேண்டியது அவசியமானவிடத்து அந்த நடவடிக்கை உத்தியோகத்தர் அவரது தகுதிகூர் நிலைக்காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை காத்திராமல் அவருடைய நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் முடிந்த வரையில் விரைவாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3:8 தகுதிகூர் நிலையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் மருத்துவப் பரீட்சை முதலியவைவற்றிற்கு தம்மை உட்படுத்துவதற்கு வேண்டுமென்றே தாமதிக்கும் விடயத்தில் தாபன விதிக்கோவையின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 11.10இன் ஏற்பாடுகளுக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

மாகாண சபைகளின் கீழ் பதவியினர்களின் பன்முகப்படுத்தலுடன் உத்தியோகத்தர்களின் ஆளுக்குரிய கோப்புகள் மிக விரைவில் நாளது வரையானவைகளாக்கப்பட்டு தொடர்புடைய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட வேண்டியிருப்பதனால் தங்களுடைய தகுதிகூர் நிலை நியமனத்தின் பின்வரும் கட்டங்களிலுள்ள சகல சேவைகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான அறிக்கைகள் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அல்லது தொடர்புடைய நியமனம் வழங்கும் அதிகாரிகளுக்கு 1989 ஏப்ரல் 30ஆந் தேதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்:-

1. தகுதிகூர் நிலைக்காலத்தில் அதிருப்திகரமான சேவைக்காக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ள மேற்போந்த 3:1 இல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள்.

11. தங்களுடைய தகுதிகூர் நிலைக்காலத்தில் தங்களுக்கெதிரான ஒழுக்காற்று விசாரணைகள் முடிவுறுமல் காத்திருக்கும் உத்தியோகத்தர்கள்.

111. தங்களுடைய தகுதிகூர் நிலைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆனல் தங்களுடைய நியமனங்களில் உறுதி செய்யப்படாமலிருக்கும் உத்தியோகத்தர்கள்.

IV. அதிருப்திகரமான சேவை காரணமாகத் தங்களுடைய தகுதிகூர் நிலைக்காலம் நீடிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

V. தங்களுடைய கட்டுப்பாட்டிற்குட்பட்ட காரணங்களுக்காக உறுதிப்படுத்தலுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாமல் இருக்கும் உத்தியோகத்தர்கள் மேலேயுள்ள 3:8 ஐப் பார்க்க.

05. மேலே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கெதிரான முடிவுறுமல் இருக்கும் சகல ஒழுக்காற்று விடயங்களும் இன்று தொடக்கம் மூன்று மாதகாலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகும்.

06. உத்தியோகத்தர்களை அவர்களுடைய நியமனத்தில் உறுதிப்படுத்தல் சம்பந்தமான சகல தாபன வேலைகளும் பூர்த்தி செய்யப்படாமல் உத்தியோகத்தர்களின் எந்த ஆளுக்குரிய கோப்புகளும் கைமாற்றஞ் செய்யப்படாமல் இருப்பதைப் பற்றி சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தர்களும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஒப்பம்: சிறில் கமகே
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

எம்.என். ஜுனைட்
அரசாங்க நிருவாக இராஜாங்க
அமை.இன் செயலாளரும், அரசாங்க
நிருவாக, மாகாணசபைகள், உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரும்.

நளீ/31